ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

| | | |
|---|---|---|
| ඉස්ලාම් I<br>இஸ்லாம் I<br>Islam I | 44 T I | පැය දෙකයි<br>இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள்:**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம்** காட்டுக.

**1.** ஸகாத் பெறத் தகுதியானோரில் 'அல்காரிமூன்' எனப்படுவோர்
(1) கடனாளிகள் ஆவர். (2) பரம ஏழைகள் ஆவர்.
(3) ஸகாத் வசூலிப்போர் ஆவர். (4) பிரயாணிகள் ஆவர்.
(5) அடிமைகள் ஆவர்.

**2.** மலக்குகளை ஈமான் கொள்வது இஸ்லாமிய அகீதாவில் எத்தனையாவது அம்சமாகும்?
(1) முதலாவது (2) இரண்டாவது (3) மூன்றாவது
(4) நான்காவது (5) ஐந்தாவது

**3.** 'நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் முழு மனித சமுதாயத்துக்கும் உரியவர்' என்பதைக் குறிக்கும் சொல்
(1) காப்பதுன் லின்நாஸ் (2) காத்தமுன் நபிய்யீன்
(3) ரஹ்மதுன் லில் ஆலமீன் (4) ஸிராஜுன் முனீர
(5) உஸ்வதுன் ஹஸனா

**4.** பின்வருவனவற்றுள் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களின் புதல்வர்களால் தொகுக்கப்பட்ட நூல்
(1) மஸாஇல் ஸாலிஹ்
(2) அர்ரிஸாலா பீ உஸூலில் பிக்ஹ்
(3) கிதாபுல் உம்மு
(4) பிக்ஹுல் அக்பர்
(5) அல் முதவன்னா

**5.** தொழுகையுடன் சேர்த்து ஸகாத் அல்குர்ஆனில் சுமார் எத்தனை இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது?
(1) 07 (2) 17 (3) 27 (4) 37 (5) 47

**6.** மு.்.தஸிலாக்களின் அகீதாவில் **உள்ளடங்காதது**
(1) தவ்ஹீத்
(2) நீதி
(3) இரு நிலைகளுக்கு இடைப்பட்ட நிலை
(4) இஸ்மத்
(5) வாக்குறுதியும் தண்டனையும்

**7.** ஒருவர் மரணித்த பின்னர் அவரது சொத்துக்களை வாரிசுகளுக்குப் பகிர்ந்தளிப்பது தொடர்பான கலையைக் குறிப்பது
(1) இல்முல் ஹதீஸ் (2) இல்முல் மீராஸ் (3) இல்முல் அகீதா
(4) இல்முல் ஜரஹ் வத்த.்.தீல் (5) இல்முத் தப்ஸீர்

**8.** பின்வருவனவற்றுள் ஆண்கள் அணிவதற்குத் தடை செய்யப்பட்ட ஆடை அணிகலன்கள்
(1) தங்கம், வெள்ளி (2) பருத்தி ஆடை, பட்டாடை
(3) பட்டாடை, வெள்ளி (4) வெள்ளி, பருத்தி ஆடை
(5) தங்கம், பட்டாடை

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



**9.** தெரிவு செய்யப்பட்ட சில நபிமார்களுக்கு வழங்கப்பட்ட தூதுத்துவம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
(1) ரிஸாலத் (2) நுபுவ்வத் (3) ஹிதாயத்
(4) மஹப்பத் (5) முஃஜிஸத்

**10.** அளவை நிறுவைகளில் மோசடி செய்து, அல்லாஹ்வின் வரம்புகளை மீறி நடந்த 'அய்கா' சமூகம் அழிக்கப்பட்டதாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. இந்த சமூகத்துக்கு நபியாக அனுப்பப்பட்டவர் யார்?
(1) லூத் (அலை) (2) ஸாலிஹ் (அலை)
(3) மூஸா (அலை) (4) நூஹ் (அலை)
(5) சுஐப் (அலை)

**11.** ஒருவரிடம் 40 மாடுகள் இருப்பின் அவருக்கு விதியாகும் ஸகாத்தின் அளவு
(1) ஒரு வயது பூர்த்தியான ஒரு ஆடு
(2) இரண்டு வயது பூர்த்தியான ஒரு ஆடு
(3) ஒரு வயது பூர்த்தியான ஒரு மாடு
(4) இரண்டு வயது பூர்த்தியான ஒரு மாடு
(5) இரண்டு வயது பூர்த்தியான இரண்டு மாடுகள்

**12.** மகாஸிதுஷ் ஷரீஆவின் வகைப்படுத்தல்களில் மிகச் சரியானது
(1) ழரூரிய்யாத், ஹாஜிய்யாத், தஹ்ஸீனிய்யாத்
(2) ழரூரிய்யாத், தஹ்ஸீனிய்யாத், இபாதாத்
(3) ழரூரிய்யாத், ஹாஜிய்யாத், முனாகஹாத்
(4) ஹாஜிய்யாத், ஜினாயாத், தஹ்ஸீனிய்யாத்
(5) தஹ்ஸீனிய்யாத், அஹ்லாகிய்யாத், ஜினாயாத்

**13.** பின்வருவனவற்றுள் 'அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ' பிரிவினரைக் குறிக்கப் பயன்படும் சொல்
(1) அஹ்லுல் கிதாப் (2) அஹ்லுல் பிதஃ (3) அஹ்லுர் ரஃயி
(4) அஹ்லுல் அதர் (5) அஹ்லுத் திம்மா

**14.** "வாலிபர்களே! உங்களில் திருமணம் செய்ய சக்தியுள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளவும். ஏனெனில் அது பார்வையைக் கட்டுப்படுத்தவும், கற்பைப் பேணவும் சிறந்ததாகும்" எனக் குறிப்பிட்ட நபியவர்கள், திருமணம் செய்ய சக்தியில்லாதவர் பின்வருவனவற்றுள் எச்செயலைச் செய்யும்படி ஏவினார்கள்?
(1) சுன்னத்து தொழுகைகளில் கவனம் செலுத்துதல்
(2) அதிகமாக திக்ரு செய்தல்
(3) இஃதிகாப் இருத்தல்
(4) துறவறம் மேற்கொள்ளல்
(5) நோன்பு நோற்றுக் கொள்ளுதல்

**15.** பின்வருவனவற்றுள் ஒரு மனிதனுக்கு அதிஷ்டத்தில் அடங்கக்கூடியவை என நபியவர்கள் கூறிய நான்கு விடயங்களும் எவை?
(1) நல்ல மனைவி, நல்ல நண்பன், நல்ல அயலவன், சிறந்த வாகனம்
(2) நல்ல மனைவி, விசாலமான வீடு, நல்ல அயலவன், சிறந்த வாகனம்
(3) நல்ல நண்பன், விசாலமான வீடு, சிறந்த வாகனம், நல்ல ஆடை
(4) விலாசமான வீடு, நல்ல நண்பன், நல்ல ஆடை, சிறந்த வாகனம்
(5) சிறந்த வாகனம், விசாலமான வீடு, அழகான தோட்டம், நல்ல மனைவி

**16.** நஸ்கின் வகைகளில் **உள்ளடங்காதது**
(1) அல்குர்ஆன் வசனம் ஒன்று இன்னொரு அல்குர்ஆன் வசனத்தால் மாற்றப்படுதல்
(2) அல்குர்ஆனின் சட்டம் ஒன்று அஸ்ஸுன்னாவினால் மாற்றப்படுதல்
(3) ஸுன்னாவின் சட்டம் ஒன்று ஸஹாபி ஒருவரின் கூற்றினால் மாற்றப்படுதல்
(4) ஸுன்னாவின் சட்டம் ஒன்று அல்குர்ஆனினால் மாற்றப்படுதல்
(5) ஸுன்னாவின் சட்டம் ஒன்று ஸுன்னாவினால் மாற்றப்படுதல்

**17.** கப்பாரா என்ற குற்றப் பரிகாரத்துடன் நோன்பை விட அனுமதிக்கப்பட்டவர்கள் யாவர்?
(1) தேவை நிமித்தம் பிரயாணம் செய்வோர்
(2) மாத விலக்குடைய பெண்கள்
(3) பருவ வயதை அடையாத சிறுவர்கள்
(4) குணமடையும் நிலையிலுள்ள நோயாளிகள்
(5) குணமடையாது என்ற நிலையிலுள்ள நோயாளிகள்

[பக். 3 ஐப் பார்க்க

**18.** ஸஹீஹ் முஸ்லிம் ஹதீஸ் தொகுப்பின் ஆசிரியரான இமாம் முஸ்லிம் இப்னு ஹஜ்ஜாஜ் (ரஹ்) அவர்கள் பிறந்த ஆண்டும், பிறந்த இடமும் முறையே
(1) ஹி. 194, புகாரா
(2) ஹி. 201, ஸிஜிஸ்தான்
(3) ஹி. 204, நைஸாபூர்
(4) ஹி. 209, குராஸான்
(5) ஹி. 215, நஸாஈ

**19.** ஒரு மனிதன் மரணித்த பின்னரும் அவனுக்கு தொடர்ந்தும் நன்மை துண்டிக்கப்படாமல் கிடைத்துக்கொண்டே இருக்கும் என நபியவர்கள் கூறிய நற்செயல்கள்
(1) நிலையான தர்மம், பர்ளான நோன்பு, பயனுள்ள கல்வி
(2) பயனுள்ள கல்வி, பெற்றோருக்காகப் பிரார்த்திக்கும் ஸாலிஹான பிள்ளை, பர்ளான தொழுகை
(3) பெற்றோருக்காகப் பிரார்த்திக்கும் ஸாலிஹான பிள்ளை, பர்ளான நோன்பு, பர்ளான ஹஜ்
(4) நிலையான தர்மம், பயனுள்ள கல்வி, பெற்றோருக்காகப் பிரார்த்திக்கும் ஸாலிஹான பிள்ளை
(5) பர்ளான தொழுகை, பர்ளான நோன்பு, நிலையான தர்மம்

**20.** பிக்ஹு கலை வரலாற்றில் 'மத்ரஸது அஹ்லில் ஹதீஸ்' என அழைக்கப்படுவோர் எவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து இஸ்லாமிய சட்டங்களை விளக்கியவர்களாவர்?
(1) பகுத்தறிவுக்கும் தர்க்கவியலுக்கும்
(2) ஹதீஸ்களுக்கு மாத்திரம்
(3) ஹதீஸ்களுக்கும் பகுத்தறிவுக்கும்
(4) ஹதீஸ்களுக்கும் தர்க்கவியலுக்கும்
(5) ஹதீஸ்களுக்கும் சுய சிந்தனைக்கும்

**21.** அல்லாஹ் ஆகுமாக்கியவற்றுள் அவனுக்கு மிகவும் வெறுப்பான செயல் என ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம்
(1) பலதார மணம்
(2) கடன் வாங்குதல்
(3) தலாக் சொல்லுதல்
(4) சாட்சி சொல்லுதல்
(5) பிராணிகளை அறுத்தல்

**22.** இஸ்லாமிய வியாபார முறைகளுள் 'அல்பைஉல் முஅஜ்ஜல்' என்பது எதனைக் குறிக்கின்றது?
(1) தரகர் வியாபார முறை
(2) கூட்டுப் பங்குடைமை
(3) சேவைத் துறை
(4) தவணைக் கட்டண கொடுக்கல் வாங்கல்
(5) விவசாயப் பங்குடைமை

**23.** உடன்படிக்கையில் ஏற்பட்ட ஒரு கோளாறு காரணமாக திருமணம் இரத்துச் செய்யப்படுவதைக் குறிக்கும் முறை
(1) ஈலாஉ (2) குல்உ (3) பஸ்கு (4) ழிஹார் (5) லிஆன்

**24.** இஜ்திஹாதின்படி செயற்பட அனுமதியளித்து, நபியவர்களால் யெமன் தேசத்திற்கு கவர்னராக அனுப்பி வைக்கப்பட்ட ஸஹாபி யார்?
(1) ஸைத் பின் தாபித் (ரழி)
(2) முஆத் பின் ஜபல் (ரழி)
(3) முஸ்அப் இப்னு உமைர் (ரழி)
(4) அம்ரு இப்னுல் ஆஸ் (ரழி)
(5) முஹம்மத் இப்னு மஸ்லமா (ரழி)

**25.** பர்உவில் காணப்படும் இல்லத் ஆனது அஸ்லின் இல்லத்தை விட பெறுமானத்தில் கூடுதலாக இருத்தல் கியாஸின் எவ்வகையைச் சார்ந்தது?
(1) கியாஸுல் அவ்லா
(2) கியாஸுல் முஸாவி
(3) கியாஸுல் அத்னா
(4) கியாஸுல் ஜலி
(5) கியாஸுல் கபி

**26.** மரணித்த ஒருவருக்கு ஒரேயொரு பெண் வாரிசு மட்டும் இருந்தால் அப்பெண் பெறும் வாரிசுச் சொத்தின் அளவு
(1) 1/5 பங்கு
(2) 1/4 பங்கு
(3) 1/3 பங்கு
(4) 1/2 பங்கு
(5) முழுச்சொத்தும்

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**27.** பின்வருவனவற்றுள் திருமண ஒப்பந்தம் நிறைவேறுவதற்கு அவசியம் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய அம்சம்
(1) திருமணத்தில் ஈடுபடும் இரு தரப்பினரும் தங்களது திருப்தியை வெளிப்படுத்தல்
(2) குடும்பத்தினர், உறவினர்களை அழைத்து விருந்துபசாரம் ஒன்றை ஏற்பாடு செய்தல்
(3) திருமண நிகழ்வில் மணமக்களும் குடும்பத்தினரும் அலங்காரமாக ஆடையணிந்திருத்தல்
(4) திருமணத்தின்போது திருமணப் பதிவாளர் முன்னிலையில் மணமக்கள் கையொப்பமிடல்
(5) திருமணத்தை உறுதிப்படுத்தும் முகமாக மணமகன் மணமகளுக்கு தாலி கட்டுதல்

**28.** ஒரு மனிதனின் ஆன்மீக வாழ்வு தொடர்பான இஸ்லாமிய நோக்காக அமைவது
(1) மனிதன், உடலும் அறிவும் கொண்டவன் எனும் வகையில் செயற்படுதல்
(2) வாழ்வில் உலகப் பற்றுக்கும் துறவறத்துக்கும் இடையில் சமநிலை பேணுதல்
(3) உடலை வருத்திக் கொள்வதன் மூலம் ஆன்மீக விமோசனத்தைப் பெறல்
(4) வாழும்போது நவீன விடயங்களை எதிர்நோக்காது ஒதுங்கியிருத்தல்
(5) உலக வாழ்வில் தீவிர ஈடுபாடு கொண்டு அதில் மூழ்குதல்

**29.** இஸ்லாமியப் பொருளாதாரத்தில் நெகிழும் தன்மையை வெளிப்படுத்தும் விதியாக அமைவது
(1) வளங்கள் அனைத்தும் அல்லாஹ் விதித்த சட்டங்களுக்கமையவே மனிதனால் பயன்படுத்தப்பட முடியும்.
(2) ஒரு தனிமனிதன் சொத்துக்களை வைத்துக் கொள்வதற்கும் அதனைச் செலவிடுவதற்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளான்.
(3) சமகாலப் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப பொருளாதாரத் திட்டங்களை வகுத்து அவற்றை அமுலுக்குக் கொண்டு வரமுடியும்.
(4) ஒரு சிலரிடம் மட்டும் செல்வம் தேங்கியிருந்து, சமநிலையற்ற தன்மை தோன்றுவது தடுக்கப்பட்டுள்ளது.
(5) ஆடம்பரம், வீண்விரயம் என்பன தவிர்க்கப்பட்டு, செலவினங்கள் ஒழுங்குபடுத்தப்படுவது அவசியமாகும்.

**30.** ஜாஹிலிய்யாக் கால சமூக அமைப்பில் காணப்பட்ட அஸபிய்யா நடைமுறை யாது?
(1) நிபந்தனைகள் எதுவுமின்றி எல்லா நிலையிலும் தமது கோத்திரத்துக்கு விசுவாசமாக இருத்தல்
(2) அறிவு, செல்வம், இராஜதந்திரம் உடையவர்களிலிருந்து 'மலஉ' எனும் மேல் சபைக்கான நிருவாகிகளைத் தெரிவு செய்தல்.
(3) குடும்பங்கள் இணைந்து கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளல்
(4) அறிவு, அனுபவம், வீரம், செல்வாக்கு ஆகியவற்றைக் கொண்ட ஒருவரை கோத்திரத் தலைவராகத் தெரிவு செய்தல்
(5) போட்டிகளில் வெற்றி பெறுவதற்கும் எதிரிகளிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கும் தம் கோத்திரத்திற்கு ஆள்பலத்தைச் சேர்த்தல்

**31.** பின்வருவனவற்றுள் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் உழைப்பு பற்றிய **பிழையான** கூற்று
(1) வணக்க வழிபாடுகளில் மட்டுமன்றி, தொழில் நடவடிக்கையிலும் ஈடுபடுவது ஓர் உண்மையான மு∴மினுக்குரிய அடையாளமாகும்.
(2) உழைப்பதற்கு சக்தி பெற்ற ஒருவர் எவ்வித தொழிலிலும் ஈடுபடாதிருப்பது ஹராமாகும்.
(3) ஒருவர் ஒரு கயிற்றை எடுத்துச் சென்று, விறகு சேர்த்து தொழிலில் ஈடுபடுவது யாசகம் செய்வதைவிடச் சிறந்ததாகும்.
(4) எந்த நேரத்திலும் வணக்க வழிபாடுகளில் ஈடுபடும் ஒருவர் தொழிலில் ஈடுபடுவதிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டுள்ளார்.
(5) உழைக்கும் சக்தியுள்ள ஒருவருக்கு ஸகாத்தில் பங்கு கொடுப்பது ஹலாலாக மாட்டாது.

**32.** பின்வருவனவற்றுள் ஜாஹிலிய்யாக் கால மக்களின் நம்பிக்கை தொடர்பான நடைமுறைகளில் இஸ்லாமிய அகீதாவுக்கு எதிரானது **அல்லாதது**
(1) ஜாஹிலிய்யாக் கால மக்கள் தமது தெய்வங்களை வணங்குவதன் மூலம் அவை தம்மை அல்லாஹ்வுக்கு மிகவும் சமீபமாக்கி வைக்கும் என நம்பிக்கை கொண்டிருந்தனர்.
(2) அவர்கள் சிலைகளை வணங்கிக் கொண்டிருந்த போதிலும், தம்மைப் படைத்தவன் யார் எனக் கேட்கப்பட்ட போது, 'அல்லாஹ்தான்' என்று பதிலளிக்கும் பழக்கமுடையோராக இருந்தனர்.
(3) ஜாஹிலிய்யா மக்கள் சிலை வணக்கத்தில் ஈடுபட்டிருந்ததோடு, அல்லாஹ்வின் இருப்பிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.
(4) ஜாஹிலிய்யாக் கால மக்களில் 'ஹுனபா' என அழைக்கப்பட்ட சிலர் இப்றாஹீம் (அலை) அவர்களின் மார்க்கத்தைப் பின்பற்றினர்.
(5) அல்லாஹ்வில் நம்பிக்கை கொண்டிருந்த சிலர் தம் பிள்ளைகளுக்கு சிலைகளின் பெயர்களுக்கு முன்னால் 'அப்து' எனச் சேர்த்து அப்துல் உஸ்ஸா போன்ற பெயர்களைச் சூட்டியிருந்தனர்.

[பக். 5 ஐப் பார்க்க

**33.** பின்வருவனவற்றுள் இஸ்லாமிய தண்டனைகள் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய நிபந்தனைகளுள் **அடங்காதது** யாது?

(1) தண்டனைகள் நிறைவேற்றப்பட முன்னர் குற்றங்கள் சாட்சிகளுடன் நிரூபிக்கப்படல் அல்லது குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொள்ளல்
(2) தண்டனைகள் வழங்கப்பட முன்னர் குற்றங்கள் நிகழ்வதைத் தடுக்கக்கூடிய ஒரு சூழல் உருவாக்கப்பட்டிருத்தல்
(3) தண்டனைகள் நிறைவேற்றப்பட முன்னர் குற்றத்தைத் தூண்டிய காரணி சரியாகப் புரிந்து கொள்ளப்படல்
(4) சந்தேகத்தின் அடிப்படையில் தண்டனைகள் வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ளல்
(5) குற்றமிழைத்தவர்களின் சமூக அந்தஸ்தைக் கருத்திற் கொண்டு தண்டனைகளைத் தீர்மானித்து, அவற்றை நிறைவேற்றல்

**34.** பின்வருவனவற்றுள் ஸகாத் நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்பட **முடியாத** செயற்பாடு

(1) உழைப்பதற்கு சக்தியுள்ள ஓர் ஏழைக்கு, அவனது உழைப்புக்குத் தேவையான ஓர் இயந்திரத்தை வழங்குதல்
(2) வியாபாரம் செய்வதற்கான ஆற்றலைக் கொண்ட ஏழை ஒருவருக்கு, அவரது வியாபாரத்துக்குத் தேவையான பொருட்கள் சிலவற்றையாவது வழங்குதல்
(3) ஏழை விவசாயி ஒருவருக்கு விவசாயம் செய்வதற்குரிய நிலத்தையும் விவசாயத்துக்குத் தேவையானவற்றையும் வழங்குதல்
(4) ஹஜ் கடமையை நிறைவேற்ற வசதியற்ற ஒருவருக்கு, அக்கடமையை நிறைவேற்றுவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
(5) முதியவரான ஓர் ஏழை, தொழில் முயற்சிகளில் ஈடுபட ஆற்றல் இல்லாதபோது அவருக்கு நிரந்தர ஆண்டு வருமானம் ஒன்றிற்கான ஏற்பாடு செய்தல்

**35.** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள விடயங்களைக் கருதுக.

| | | |
|---|---|---|
| A - முழாரபா | B - அத்த.்.மீன் | C - ஹிபத் |
| D - ஹதிய்யா | E - வஸிய்யத் | F - ஸலம் |
| G - முராபஹா | H - வக்ப் | I - ரிபா |

இவற்றுள் செல்வப் பங்கீட்டைச் செயலுருப்படுத்துவதற்காக இஸ்லாம் எடுத்துக்காட்டியுள்ள வழிமுறைகளை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C, D (2) B, D, E, F (3) B, G, H, I
(4) C, A, G, H (5) C, D, E, H

**36.** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பெயர்களைக் கருதுக.

| | | |
|---|---|---|
| A - ஜன்னதுல் பிர்தவ்ஸ் | B - ஸிராதுல் முஸ்தகீம் | C - தாருல் கரார் |
| D - ஜன்னதுல் அத்ன் | E - தாருல் ஜலால் | F - ஹுதமா |
| G - தாருஸ்ஸலாம் | H - ஜஹன்னம் | I - ஜஹீம் |

இவற்றுள் சுவர்க்கத்தின் பெயர்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C, D, E (2) A, C, D, E, G (3) B, C, D, G, I
(4) C, D, F, H, I (5) E, F, G, H, I

**37.** பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள இஸ்லாமிய சட்ட மூலாதாரங்களைக் கருதுக.

| | | |
|---|---|---|
| A - அல்குர்ஆன் | B - அஸ்ஸுன்னா | C - அல் இஜ்மாஉ |
| D - இஸ்திஹ்ஸான் | E - ஸஹாபாக்களின் கருத்துக்கள் | F - முன்னைய நபிமார்களின் ஷரிஆக்கள் |
| G - இஸ்திஸ்ஹாப் | H - அல் உர்பு | I - மதீனாவாசிகளின் நடைமுறைகள் |

இவற்றுள் இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் கடைப்பிடித்த சட்ட மூலாதாரங்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C, D, E (2) A, B, C, E, G (3) B, C, D, E, F
(4) B, D, E, F, G (5) C, D, E, G, H

**38.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - இஸ்லாம் எக்காலத்துக்கும் பொருத்தமானது என்பதை நிறுவ உதவுகின்றது.
B - சட்ட வல்லுநர் ஒருவர் உருவாவதற்கு உதவுகின்றது.
C - அறிவுடன் தொடர்புடைய விதத்தில் முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்க உதவுகின்றது.
D - மக்கள் மத்தியில் இஸ்லாத்தைப் பரப்புவதற்குத் துணையாக அமைகின்றது.
E - சிந்தனைச் சுதந்திரத்துக்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

இவற்றுள் இஜ்திஹாதின் பயன்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C (2) A, B, E (3) A, C, E (4) B, C, D (5) B, C, E

[பக். 6 ஐப் பார்க்க

**39.** பின்வரும் விடயங்களைக் கருதுக.

A - இஸ்லாத்துக்கு எதிரான சதிகள்

B - உஸ்மானிய கிலாபத்தின் வீழ்ச்சி

C - ஸஹாபாக்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல் ரீதியான பிளவுகள்

D - அல்குர்ஆன், ஸுன்னா விடயத்தில் போதிய அறிவின்மை

E - முஸ்லிம் நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள்

F - பிற கலாசாரங்களின் தாக்கம்

இவற்றுள் இஸ்லாமிய வரலாற்றில் அகீதாவுக்கு முரண்பட்ட பல்வேறு பிரிவுகள் தோன்றியமைக்கான காரணிகளை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A, B, C, D (2) A, B, C, E (3) A, C, D, F (4) B, C, D, E (5) C, D, E, F

**40.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - ஒருவர் தான் விரும்புகின்ற ஒன்றை விரும்பவில்லை எனக் குறிப்பிட்டால் அது பொய் பேசியதாகக் கருதப்படமாட்டாது.

B - சிறு சிறு விடயங்களில் பொய் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியதில்லை.

C - விவாதத்தின்போது தேவையேற்படின் பொய்கள் சிலவற்றையும் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

D - சிறிய பொய்யொன்றைக் கூறினாலும் அது சிறிய பொய்யென மறுமைப் பதிவேட்டில் பதிந்து வைக்கப்படும்.

E - மனித வாழ்வில் பொய் சொல்லுதல் என்பது பெரும் பாவங்களில் உள்ளடங்கும்.

இவற்றுள் ஒரு முஸ்லிம் பொய் பேசுதல் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் சரியான கூற்றுகளை மட்டும் கொண்ட தெரிவு யாது?

(1) A ,B (2) B, C (3) B, D (4) C, D (5) D, E

**41.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - அப்பாஸிய ஆட்சிக் காலத்தில் அறிவியற் துறை போன்று ஆன்மீகத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாததன் காரணமாக முஸ்லிம்களிடம் அத்துறை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

B - ஆன்மீகத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்த சூபி மகான்கள், இஸ்லாத்தை அழித்தொழிக்க முயன்ற மங்கோலியர்களை இஸ்லாத்தை ஏற்கச் செய்தனர்.

C - மக்களை ஆன்மீக வழியில் நெறிப்படுத்தும் நோக்கில் ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி அவர்களின் பயிற்சி வழியில் காதிரிய்யா தரீக்கா தோற்றம் பெற்றது.

D - தம்மிடம் பைஅத் பெற்றவர்களை அல்குர்ஆன், ஸுன்னா வெளிச்சத்தில் ஆன்மீக உயர்ச்சிக்கு இட்டுச் செல்லும் பணியை சூபி மகான்கள் மேற்கொண்டிருந்தனர்.

E - வரலாற்றில் மேற்குலக ஏகாதிபத்தியவாதிகள் சூபி தரீக்காக்களை மாசுபடுத்தும் நோக்கில் அவற்றுள் ஊடுருவி பல தரீக்காக்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்திவிட்டனர்.

இவற்றுள் வரலாற்றில் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு சூபி மகான்களின் பங்களிப்புகளை விளக்கும் கூற்றுக்களை மட்டும் உள்ளடக்கிய தெரிவு யாது?

(1) A ,B, C (2) A, B, D (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**42.** மக்கி, மதனி வசனங்களின் சிறப்பம்சங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

A - ‘ஓ மனிதர்களே!’ என விழிக்கும் போக்கு

B - சமூகப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தல்

C - முனாபிக்குகளின் பண்புகளைப் பற்றி விளக்குதல்

D - வசனக் கவர்ச்சி, சிறிய ஆயத்துக்கள், சிறிய அத்தியாயங்கள்

E - ஹுரூபுல் முகத்தஆத் பிரயோகம் சூறாக்களின் ஆரம்பத்தில் இடம்பெற்றிருத்தல்

F - நீண்ட வசனங்கள், நீண்ட அத்தியாயங்கள்

இவற்றுள் மக்கி வசனங்களின் சிறப்பம்சங்களை மட்டும் கொண்ட தெரிவு யாது?

(1) A, B, C (2) A, D, E (3) B, C, F (4) B, D, E (5) D, E, F

[பக். 7 ஐப் பார்க்க

● **43** முதல் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் **X, Y** எனும் நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் உள்ளவை **X** நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒரு வகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. எனினும் அவை ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. அதன்படி **X** நிரலுக்கேற்ப **Y** நிரலிலுள்ள விடயங்களைப் பொருத்தமான வகையில் தொடர்புபடுத்தும்போது ஒழுங்குமுறையில் அமையும் சரியான விடையைத் தெரிவு செய்க.

**43.**

| X | Y |
|---|---|
| (i) கவாரிஜ் | A - மார்க்கத்தை விட்டும் விரைந்து வெளியேறியோர் |
| (ii) இஸ்னா அஸரிய்யா | B - தமது பகுத்தறிவுக் கொள்கையினால் பிரிந்து சென்றோர் |
| (iii) அல் மாரிகா | C - தலைவரின் கட்டுப்பாட்டை விட்டு வெளியேறியோர் |
| (iv) மு:.தஸிலா | D - மனிதனுக்கு எவ்வித செயலையும் செய்வதற்கான சுதந்திரம் கிடையாது என்போர் |
| (v) ஜபரிய்யா | E - இமாம்களின் எண்ணிக்கை பன்னிரண்டு என நம்பிக்கை கொண்டோர் |

(1) A, B, C, D, E (2) A, C, D, E, B (3) B, C, D, E, A
(4) C, A, B, E, D (5) C, E, A, B, D

**44.**

| X | Y |
|---|---|
| (i) மர்பூ:. | A - ஒரு ஹதீஸ் தாபிஈ வரை சென்று அவரோடு நின்று விடுதல் |
| (ii) மவ்கூப் | B - இஸ்னாத் முறிவில்லாமல் தொடர்ச்சியாக நபி (ஸல்) வரை சென்று இணையும் ஹதீஸ் |
| (iii) முர்ஸல் | C - ஒரு ஹதீஸின் இஸ்னாத் ஸஹாபி வரை மட்டும் தொடர்ந்து செல்லுதல் |
| (iv) முஅல்லக் | D - ஒரு ஹதீஸின் தொடரில் ஸஹாபியை விட்டுவிட்டு ஒரு தாபிஈ நேரடியாக நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவிக்கும் ஹதீஸ் |
| (v) மக்தூ:. | E - ஓர் இஸ்னாதின் ஆரம்பத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிவிப்பாளர்கள் விடுபடுதல் |

(1) A, B, C, D, E (2) A, C, D, E, B (3) B, C, D, E, A
(4) B, D, E, A, C (5) C, D, A, E, B

**45.**

| X | Y |
|---|---|
| (i) அல்-இஜாரா | A - வியாபார ஒப்பந்தத்தில் ஒப்புவித்தலும் ஏற்றுக் கொள்ளலும் |
| (ii) அர்-ரஹ்ன் | B - தேவைகளின்போது கடன் பெறுதல் |
| (iii) அல்-கர்ழ் | C - பொருட்கள், சேவைகளை வாடகைக்குப் பெறுதல் |
| (iv) வகாலா | D - பெற்ற கடனை திருப்பிச் செலுத்தும் வரை பெறுமதியான ஒன்றை ஈடு வைத்தல் |
| (v) ஈஜாப்-கபூல் | E - தனக்குப் பகரமாக வேறு ஒருவரைப் பொறுப்புச் சாட்டுதல் |

(1) A, B, C, D, E (2) B, C, D, E, A (3) B, D, E, A, C
(4) C, D, B, E, A (5) C, E, A, B, D

[பக். 8 ஐப் பார்க்க

- **46** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களில் இரண்டு வகையிலான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக்கூற்றுகளுக்குப் பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.

| இல. | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | ஒரு தீமை நடைபெறுவதனைக் கண்டால் அதனைத் தனது கரத்தாலோ நாவினாலோ தடுக்க சக்தி பெற்றிருந்த போதிலும் உள்ளத்தால் அதனை வெறுத்துச் செல்வதே இஸ்லாம் காட்டித் தந்த வழிமுறையாகும். | ஒருவரை வெறுப்பூட்டும் பட்டப் பெயர் கூறி அழைப்பது ஒரு முஸ்லிமின் கெட்ட குணங்களில் உள்ளதாகக் கருதப்படுவதோடு, அவன் அநியாயக்காரனாகவும் அடையாளப்படுத்தப்படுகிறான். |
| **47.** | ஒருவர் காணாமல் போய் நீண்டகாலம் வராதிருந்தால் நீதிபதியின் தீர்ப்புக்கமைய அவரது சொத்துக்கள் வாரிசுச் சொத்தாகக் கருதப்படும். | அல்குர்ஆன், ஸுன்னா ஆகியவற்றின் மூலம் பங்குகள் மிகத் தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ள வாரிசுகள் அஸ்ஹாபுல் புரூள் என அழைக்கப்படுவர். |
| **48.** | மனிதர்களிடையே காணப்படும் இனங்கள், மொழிகள் போன்ற வேறுபாடு இறை நியதிகளில் உள்ளதாகும் என அல்குர்ஆன் போதிப்பதனை ஒவ்வொரு முஸ்லிமும் ஏற்றுக்கொள்ள வேண்டும். | மனிதர்களுக்கிடையில் நிலவும் சமய, சமூக ரீதியான வேறுபாடுகள் அல்லாஹ்வின் ஏற்பாடு என்பதனை மனதிற் கொண்டு பிற சமயங்களினதும், அவற்றைப் பின்பற்றுவோரினதும் இருப்பை அங்கீகரிப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். |
| **49.** | நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் இஸ்லாமிய சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக சுமார் பத்து ஆண்டுகள் திட்டமிட்டு செயற்பட்டார்கள். | முஸ்லிம் அல்லாதோருடன் பகைமை கொண்டுள்ளபோது அவர்களுடன் நீதியாக நடந்து கொள்ள வேண்டும் என இஸ்லாம் முஸ்லிம்களை வலியுறுத்தவில்லை. |
| **50.** | இலங்கையை ஊடறுத்துச் செல்லும் கடல் வழி வர்த்தகப் பாதைகளில் பரிச்சயமற்றிருந்ததன் காரணமாக அநுராதபுர ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் வணிகத்தில் பங்கு கொண்டிருக்கவில்லை. | இலங்கை வரலாற்றில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்றோரது இன்னல்களுக்கு உள்ளான முஸ்லிம்கள் கண்டி இராச்சியத்தை அடைந்த போதிலும் அங்கிருந்த சிங்கள மன்னர்களும் அவர்களை ஆதரிக்கவில்லை. |

* * *

Past Papers Wiki



[සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

ඉස්ලාම් II
இஸ்லாம் II
Islam II

44 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) 'பிக்ஹ்' என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

(ii) பர்ளு ஐன், பர்ளு கிபாயா ஆகியவற்றை வேறுபடுத்தி விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பம் தொடக்கம் நான்காம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதி வரையான காலம் பிக்ஹ் கலையின் பொற்காலம் என இனங்காணப்படுவதற்கான காரணங்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவற்றை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இஸ்லாமிய சட்டக்கலை அறிஞர்களுக்கிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவதற்கு ஏதுவான காரணங்கள் **நான்கைக்** குறிப்பிட்டு, அவற்றை விளக்குக. (08 புள்ளிகள்)

**2.** (i) மலக்குகளுக்குரிய பணிகளுள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) வாரிசு சொத்திலிருந்து பங்குகளைப் பெற்றுக்கொள்வதனைத் தடைசெய்யும் காரணிகள் **இரண்டை** விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) ஆன்மீக மேம்பாட்டுக்குரிய வழிமுறைகளில் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவற்றை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இஸ்லாமிய பொருளாதார முறைமையின் சிறப்பம்சங்கள் **நான்கை** விளக்குக. (08 புள்ளிகள்)

**3.** (i) மறுமை நாள் என்பதற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நபி (ஸல்) அவர்களுக்குச் சொந்தமானதென இஸ்லாமிய அறிஞர்கள் வகைப்படுத்தியுள்ள ஷபாஅத்துக்கள் **இரண்டைக்** குறிப்பிட்டு, அவற்றை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) உலக முடிவிற்கான பெரிய அடையாளங்களுள் **மூன்றைக்** குறிப்பிட்டு, அவற்றை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) 'மறுமை வாழ்வு நிச்சயமானது' என்பதனை ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துக. (08 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி II

**4.** (i) 'இத்தா' என்பதனை வரைவிலக்கணப்படுத்தி, அதன் வகைகளில் **இரண்டை** ஆதாரங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) மார்க்கத்தைக் பின்பற்றுவதில் நடுநிலைப் போக்கைக் கடைப்பிடிப்பது பற்றிய இஸ்லாமிய நோக்கைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

**5.** (i) ஹஜ்ஜின் நோக்கங்களுள் **ஐந்தை** விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடாது என்பது பற்றிய இஸ்லாத்தின் போதனைகளை விவரிக்குக. (10 புள்ளிகள்)

**6.** (i) இஸ்லாமானது, "ஆண்களைப் போலவே பெண்களுக்கும் பால்நிலை சமத்துவத்தை வழங்கி, பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கிறது." இக்கூற்றைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ii) குற்றங்களுக்கு இஸ்லாம் வழங்கியுள்ள தண்டணைகள் நியாயமானவை என்பதை விமர்சன ரீதியாக ஆராய்க. (10 புள்ளிகள்)

**7.** (i) அபூபக்கர் (ரழி) அவர்கள் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட்ட விதம் பற்றிக் குறிப்பிட்டு, அவர்கள் கிலாபத்தை ஸ்திரப்படுத்துவதில் எதிர்கொண்ட சவால்களை ஆராய்க. (10 புள்ளிகள்)

(ii) போர்த்துக்கேயரால் இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளைக் குறிப்பிட்டு, அதன்போது சுதேச மன்னர்கள் முஸ்லிம்களுக்கு ஆதரவளித்த விதம் பற்றித் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

**8.** பின்வரும் தலைப்புகள் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) பெண்களுக்குரிய ஆடைகள் தொடர்பான இஸ்லாமிய சட்ட விதிகள் (05 புள்ளிகள்)

(ii) இரத்த உறவைப் பேணுவதன் அவசியம் பற்றிய இஸ்லாமிய நோக்கு (05 புள்ளிகள்)

(iii) தேசிய பாதுகாப்பில் சுதந்திரத்திற்கு முற்பட்ட இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பு (05 புள்ளிகள்)

(iv) பொதுநலன் பேணுவதற்கு இஸ்லாம் வழங்கியுள்ள முக்கியத்துவம் (05 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library